# ஈழத்து பக்தி இலக்கிய மரபில் கல்வளை அந்தாதி ஒரு நுனித்த பார்வை

**செல்வி. துஹாயா. பேரானந்தம்,**

இந்து நாகரிகத்துறை.யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.ananthamthurka@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

ஈழ வரலாற்றிலே போர்த்துக்கேயர் காலத்தையடுத்துத் தோற்றம் பெற்ற ஒல்லாந்தர் ஆட்சிக்காலமானது. சைவத் தமிழ் வரலாற்றில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தையடுத்து ஒல்லாந்தர் காலப்பகுதியிலேயே பல வித்துவச்சிறப்புமிக்க தமிழ்ப்புலவர்கள் தோற்றம் பெற்றதுடன். பெருமளவு சைவத் தமிழ் இலக்கியங்களும் தோற்றம் பெற்றன. இக்காலப்பகுதியில் தோற்றம் பெற்ற புலவர் களுள் தலைசிறந்தவராக விளங்கியவர் யாழ்ப்பாணத்து நல்லூர் சின்னத்தம்பிப் புலவரா வார். இப்புலவர் தன்னுடைய செய்யுள்களை அந்தாதி. கோவை. பள்ளு எனும் பிரபந்த வடிவங்களுக்குள் உள்ளடக்கி. சைவத்தமிழ் உலகிற்கு அளித்துள்ளமை குறிப்பிடத்தக்க தாகும். இவற்றிலே சின்னத்தம்பிப்புலவரின் வித்துவச் சிறப்பிற்கு எடுத்துக்காட்டாக அமையும் பிரபந்த வகையாக அந்தாதி காணப்படுகின்றது. அந்த வகையில் புலவரின் கல்வளையந்தாதியானது அதன் தனித்துவம் காரணமாக ஈழத்தில் மட்டுமல்ல தமிழ் நாட்டிலும் சிறப்புற்று விளங்கியமை குறிப்பிடத்தக்க தாகும். இக்கல்வளையந்தாதி யானது யாழ்ப் பாணத்தின் சண்டிலிப்பாயிலுள்ள கல்வளை எனும் பகுதியில் கோயில் கொண்டிருக்கும் விநாயகரைப் பாட்டுடைத்தலை வனாகக் கொண்டு பாடப்பட்டதே யாகும். ஈழத்துப்பக்தி இலக்கிய மரபில் கல்வளையந்தாதியானது குறிப்பிடத்தக்க இடத்தினை பெற்றுவிளங்குகின்றது எனும் கருதுகோளின் அடிப்படையில் இவ்வாய்வானது மேற்கொள்ளப்படுகின்றது. இவ்வாய்வானது விபரண ஆய்வுமுறையியல், வரலாற்று ஆய்வு முறையியலில் நிகழ்த்தப்படு கின்றது. கல்வளையந்தாதி மூலத்திற்கு எழுந்த உரை நூல்களும் மற்றும் நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் பிரபந்தங்கள் என்ற தொகுப்பு நூலும் இவ்வாய்வின் மூலங்களாக அமைந்துள்ளன. ஈழத்துப் பக்தி இலக்கிய மரபில் குறிப்பிடத்தக்க செல்வாக்கினைச் செலுத்தும் கல்வளை யந்தாதியினை ஆய்வு செய்வதன் மூலம். இவ்வந்தாதி தொடர்பான சிறப்புக்களை இன்றைய தலைமுறை யினரும் அறிந்து கொள்வதற்கு வழிசமைத்தல் என்பது இவ்வாய்வின் பிரதான நோக்க மாகும். மேலும் இவ்வாய்வினை மேற்கொள்ள என்னைத் தூண்டிய காரணத்தினையும் இங்கு குறிப்பிடுதல் அவசியமானதாகும். எனது பிரதேசத்திற்கு அண்டிய பிரதேசமான சண்டிலிப்பாயின் கல்வளை எனும் பகுதியில் எழுந்தருளியுள்ள விநாயகரைப் பாடு பொருளாகக் கொண்டு பாடப்பட்டதே இக்கல்வளையந்தாதி என்பதுவே இவ்வாய்வினை மேற்க் கொள்ள என்னைத் தூண்டிய தெனலாம்.

**திறவுச்சொற்கள்:** கல்வளையந்தாதி. ஈழம். பக்தி இலக்கியம். சின்னத்தம்பிப்புலவர்

## ஆய்வு அறிமுகம்

ஈழத்துத் தமிழ் பக்தி இலக்கிய வரலாற்றிலே ஆரியச் சக்கரவர்த்திகள் காலத்தினை அடுத்து, ஒல்லாந்தர் காலப்பகுதியே மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தாகக் கருதப்படுகின்றது. ஒல்லாந்தர்கள் போர்த்துக்கேயரிட மிருந்து யாழ்ப்பாண அரசை 1658 இல் கைப்பற்றி 138 ஆண்டுகளாக ஆட்சி செய்து வந்தனர். போர்த்துக் கேயர் காலத்தில் சைவத் தமிழ் இலக்கியங்கள் தோற்றம் பெறுவதற்கான சாதகமாக சூழல் நிலவவில்லை. ஒல்லாந்தர் காலமே சமய நெகிழ்ச்சித் தன்மையுடையதாக விளங்கியது. இக்காலப்பகுதியில் சைவத் தமிழ் மக்கள் ஓரளவுக்குச் சமயச் சுகந்திர முடையவர்களாக வாழ்ந்தார்கள் என்பதை இக்காலத்தெழுந்த தமிழிலக்கி யங்களிலிருந்து அறிய முடிகிறது. மக்கள் சமய வாழ்க்கையிலும். கோயில் வழி பாட்டிலும் நம்பிக்கை கொண்டிருந்த தாகிய அக்காலத்தில் தோன்றிய இலக்கி யங்கள் மக்களின் தேவையை பூர்த்தி செய்தன. சைவம், கிறிஸ்தவம் முதலிய சமயங்கள் சார்பான நூல்கள் இக்காலப் பகுதியில் தோற்றம் பெற்றன. சைவ பக்தி இலக்கியங் களானவை, சைவமக்களின் வழிபாட்டு மரபுகளை பேணிப் பாது காக்கும் தன்மையை கொண்டவையாகவும், தலங்களின் சிறப்பை விதந்து தமது பக்தி அனுபவங்களை வெளிப்படுத்தி யவையாகவும் காணப்படுகின்றன.

ஈழத்துத்தமிழ் இலக்கிய வரலாற்றிலே முன்னெப்பொழுதும் காணாத இலக்கிய வடிவங்கள் பல இக்காலப் பகுதியிலே தோற்றம் பெற்றுள்ளன. இவ்விலக்கிய வடிவங்களினை தமிழ் உலகிற்களித்த இக்காலத்து தமிழ்ப்புலவர்களுள் தலை சிறந்தோர் சுன்னாகம் வரத பண்டிதர், நல்லூர் சின்னத்தம்பிப்புலவர், மாதகல் மயில்வாகனப்புலவர் ஆகிய மூவருமாவர். இவர்களியற்றிய இலக்கி யங்கள் தமிழ் நாட்டிலெழுந்த இலக்கியங்கள் போன்று மிக உயர்ந்த தரத்தவையாகவும், செந்தமிழால் ஆக்கப்பட்டவை யாகவும் காணப்படுகின்றமை சிறப்பம்சமாகும். இப்புலவர்களுள் ஈழநாட்டிலே தலைசிறந்த புலவராகவும், யாழ்ப்பாணப் புலவர்களுள்ளே திலகம்போல் விளங்குப வராகவும் சிறப்பிக்கப்படுபவர் நல்லூர் சின்னத்தம்பிப் புலவராவார். செந்தமிழ்ப் புலமைவாய்ந்த புலவரவர்களால் அந்தாதி, கோவை, பள்ளு எனும் இலக்கிய வடிவங்களில் நான்கு பிரபந்தங் கள் இயற்றப்பட்டுள்ளன. இவற்றிலே அந்தாதிப் பிரபந்த வகையினைச் சேர்ந்த கல்வளை அந்தாதியே இங்கு ஆய்வு செய்யப்பட்டுகின்றது.. சின்னத்தம்பிப் புலவர் பாடிய பிரபந்த வகைகளுள்ளே கல்வளையந்தாதியே முதன்முதலில் பாடப்பட்டதாக ஆய்வாளர்களிடையே கருத்து நிலவுவதும் இவ்வாய்வுச் செந் நெறியில் குறிப்பிடத் தக்கது. இந்நூலினுடைய இலக்கணச் சிறப்புக் காரணமாக ஈழவள நாட்டில் மட்டு மன்றி தமிழ்நாட்டிலும் செல்வாக்குப் பெற்று விளங்குகின்றமை சிறப்பிற்குரியதாகும்.

## நல்லூர் சின்னத்தம்பிப் புலவர்

ஈழமண்டலத்திலே நல்ல பேரறி ஞராய்க் கவித்துவ சாமர்த்தியத்திலே தலை சிறந்தவராக சிறப்பிக்கப்படுவர் நல்லூர் சின்னத்தம்பிப் புலவராவார். இவர் 18ஆம் நூற்றாண்டு (17161780) தொடக்கத்தில் பிரபல்யமுற்று விளங்கிய நல்லூர் வில்வராய முதலியாரது புதல்வராவார். (சதாசிவம்.ஆ.(தொகுப்பு) 1966:108) கல்வியறிவு,

ஈசுரபக்தி.தமிழ்ப் புலமை என்பவற்றால் தலைசிறந்து விளங்கியவர். தமிழ் இலக்கண இலக்கி யங்களையும், புராண இதிகாசங்களை யும் சந்தேகமற கற்றுத் தெளிந்தவர். இவர் இளமையிலேயே கவிபாடும் திறம் படைத்தவர் என்பதனை, அவர் தந்தை யாரைத் தேடிவந்த தமிழ்ப்புலவர் ஒருவருக்கு அவர் விடையளித்த,

"பொன் பூச்சொரியும் பொலிந் தாதிறைக்கும்
நன்பூ தலத்தோர்க்கு நன்னிழலாம்- மின்பிரபை
வீசுபுகழ் நல்லூரான் வில்லவரா யன்கனக
வாசலிடைக் கொன்றை மரம்" (இரகுபரன்.க.(பதிப்பு):2005:297)

என்ற வெண்பாவினால் அறிய முடி கின்றது. இப்புலவருடைய செந்தமிழ் ஆற்றலினால் அவருக்கு "வரகவி", "அருட்கவி", "வாலகவி" எனும் பெயர்களும் வழங்கி சிறப்பிக்கப் பட்டன. சின்னத்தம்பிப் புலவரின் சமகாலத்தவர்களாக, யாழ்ப்பாண புலவர்களான மாதகல் மயில்வாகனப்புலவர், சுன்னாகம் வரத பண்டிதர், இருபாலை சேனாதிராய முதலியார் முதலானோர் கொள்ளப்படுகின்றனர். இவர்களுள் வரத பண்டிதர் சின்னத்தம்பிப் புலவரோடு புலமைத் தொடர்பு கொண்டவராகத் திகழ்ந் துள்ளார்.

## சின்னத்தம்பிப் புலவரது படைப்பாக்கங்கள்

நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் தமிழ் பக்தி உலகிகளித்த கொடைகளாக கல்வளை அந்தாதி, மறைசை அந்தாதி, கரவை வேலன் கோவை, பறாளை விநாயகர் பள்ளு போன்ற பிரபந்த வகை கள் காணப்படுகின்றன. இப்பிரபந்தங்கள் வரிசையில் கல்வளை அந்தாதியே இவரால் முதன் முதல் செய்யப்பட்ட பிரபந்தம் என்பது சில ஆய்வாளர் களுடைய கருத்தாகவும் காணப்படு கின்றது. (இரகுபரன்.க.(பதிப்பு). 2005:Xii) இருப்பினும் இவ்வாறும் ஒரு கருத்து நிலவி வருகின்றது.

"சின்னத்தம்பி புலவரின் நான்கு நூல்களையும்
கால ஒழுங்கில் வரிசைப்படுத்து வதற்கு அது பற்றிய
தெளிந்த அறிவு இல்லாத காரணத்தினால் தமிழ்
பிரபந்த வரலாற்றினை அடிப்படையில் அந்தாதிகள்
இரண்டும் முன் வைக்கப்பட்டன. அந்தாதிகளுக்குள்
கல்வளை அந்தாதி முன்வைக்கப் பட்டது.
விநாயகரை எப்போதும் முன்னிறுத்தும் வழக்கம் கருதியே"

(இரகுபரன்.க.,(பதிப்பு).2005:XVIII)

கல்வளையந்தாதியானது யாழ்ப் பாணத்து சண்டிலிப்பாயிலுள்ள புராதன தலமாகிய கல்வளைப் பகுதியில் கோயில் கொண்டிருக்கும் விநாயகப் பெருமான மீது பாடப்பட்டதாகும். மறைசை அந்தாதி தமிழ் நாட்டிலுள்ள வேதா ராணியத்தில் மேற் பாடப்பட்டதாகும். யாழ்ப்பாணத்து கரவெட்டி என்னும் ஊரில் வாழ்ந்த வேலாயுத பிள்ளை என்னும் பிரபு பற்றி பாடப்பட்ட கோவைப் பிரபந்தமே கரவை வேலன் கோவையாகும். சுழிபுரம் பறாளை என்னும் தலத்தில் எழுந்தருளியுள்ள விநாயகப் பெருமானை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு பாடப்பட்ட பிரபந்தமாக பறாளை விநாயர்கள் பள்ளு அமைகின்றது. சின்னத்தம்பி புலவரின் இப்பிரபந்தங்கள் பக்திச் சிறப்பும், தமிழ் இலக்கியப் பெருமையும் கொண்டவை யாக அமைகின்றன.

'கல்வளை', 'அந்தாதி' எனும் இரு சொற்பதங்களின் விளக்கம்

கல்வளை அந்தாதியினை இரு சொற்பதங்களாக பிரித்து நோக்குவது சாலச்சிறந்தது. கல்வளை என்பது யாழ்ப் பாணத்துள் அமையப் பெற்றுள்ள, சண்டிலிப் பாயின் பூர்வீக நாமமாகக் காணப்பட்டுள்ளது. (முத்துத்தம்பிப் பிள்ளை.ஆ.,1915:152) பின்னரே இக்கல்வளையானது சண்டிலிப்பாய் பிரதேசத்தின் ஒரு குறிச்சியாக உள்ளடக்கப்பட்டுள்ளது. "கல்வளை" எனும் பெயர் "கற்களில் அமைந்த குழி" எனவும் பொருள் கொள்ளப்படுகின்றது. அதாவது பொறிக் கிடங்குகள் பரவலாக அமைந்த பிரதேசம் என கொள்ள முடியும். (Thumi.org.வழக்கியாறு 20:இதழ்-20) மேலும் கல்வளை என்பது நீர் நிலைகளை குறிப்பதற்கு பயன்படுத்தப்படும் சொற்பதமாகவும் கையாளப் பட்டுள்ளது. (சண்டிலிப்பாய்,கல்வளை ஸ்ரீ பர மானந்தப் பிள்ளையார் கோயில் வரலாறு: 2016:12)

அந்தாதி என்பது தமிழிலுள்ள பிரபந்த வகைகளுள் ஒன்றாக காணப்படு கின்றது. ஒரு செய்யுளின் ஈற்றிலுள்ள எழுத்து, சொல் அல்லது சொற்றொடர் அடுத்த செய்யுளின் முதலாக அமைவது அந்தாதியாகும். இதனை அந்தம் + ஆதி எனப் பிரித்துப் பொருள் கொண்டால், அந்தத்தை ஆதியாகக்கொண்டு பாடுவ தென சுட்டி நிற்கிறது. பக்தி இலக்கியங்களைப் பாடுவதில் இவ்வத்தாதி குறிப்பிட்டத்தக்கதாக காணப்படுகின்றது.

"ஒரு பிரபந்தம், நின்ற பாட்டினிறுதியும், வரும்
பாட்டின் முதலும் ஒன்றாய் வருமோர் தொடை,
பராபரம், கடவுள்". (மதுரைத் தமிழ்பேரகராதி,முதலாம் பாகம்:2004:92)

"முதல் பாடலின் இறுதிச் சொல்லையோ
தொடரையோ அடியையோ அடுத்த பாடலின்
தொடக்கமாகக்கொண்டு இயற்றப்படும் நூல்". (க்ரியாவின் தற்காலத்தமிழ் அகராதி: 1992:40)

கல்வளை அந்தாதியின் அமைப்பு முறை

"கல்வளை" எனும் தலத்திலுள்ள பிள்ளையார் மீது யமகம், திரிபு எனும் சொல்லணிகள் அமைய கட்டளைக் கலித்துறை யாப்பில், நூறந்தாதி இலக் கணத்துக் கமைய நூறு செய்யுள்களைக் கொண்ட பிரபந்த வகையாக காணப்படு கின்றது.

இதன் காப்புச் செய்யுள் "தார் கொண்ட பூ மல்லிகை" எனத் தொடங்கு கிறது. நூல் "கற்பக நாடர்" என்று தொடங்கி "கல்வளைக் கற்பகமே" என்று நிறைவு பெறுகிறது. "கற்பகம்" என்று தொடங்கிக் "கற்பகமே" என்று இந்நூல் மண்டலித்து முடிவது ஒரு சிறப்பாகும். (வாழ்வியற் களஞ்சியம்:தொகுதி-07:1991:810)

செய்யுளின் நான்கு அடிகளிலும் உள்ள முதற் சீர் ஒன்று பட்டிருப்பது. "யமகம்". இதன்படி, நூலின் முதற் செய்யுளின் உள்ள "கற்பக" என்ற சொல் நான்கு அடிகளிலும் வருகிறது. இவ்வாறு, இந்நூலில் பல செய்யுட்கள் உள்ளன. "திரிபு" என்பது, செய்யுளின் முதற் சீரின் முதலெழுத்து நீங்கலாக மற்ற எழுத்துக்கள் ஒன்றுபட்டிருப்பது. இதன்படி காப்புச் செய்யுளில் உள்ள, தார் கொண்ட, சீர் கொண்ட, பார் கொண்ட, கார் கொண்ட ஆகிய சீர்களில் முதலெழுத்து நீங்கலாக ஏனைய எழுத்துக்கள் ஒன்று பட்டிருக்கின்றன. நூலின் முதற் செய்யுள். "கண்டவரே" என்று முடிகிறது. இரண்டாம் செய்யுள், "கண்டலம்" என்று தொடங்குகிறது. இவ்வாறு அந்தாதி முறையில் நூல் அமைந்துள்ளது. (வாழ்வியற்களஞ்சியம்:தொகுதி07:1991: 810)

விநாயகரை துதிப்பதால் ஏற்படும் நன்மைகள் பற்றி இந் நூலில் சிறப்பாக குறிப்பிடப்பட்டுள்ளது. கல் வளைப் பிள்ளையாரை இந்நூல் கற்பகப் பிள்ளையா ரென்றும், வலவை (வல்ல பாம்பிகை) சுந்தன் என்றும், பிரமானந் தப் பிள்ளையா ரென்றும், இராமர் வணங்கும் வீரகத்தி விநாயகர் என்றும் சிறப்பித்துள்ளது. இவ்விநாயகரை வணங்குவோருக்கு தீவினையணுகா வென்றும் பிறவித் துயர் போகுமென்றும் இந்நூல் செப்புகின்றது. இவ்வந்தாதி யின் பல பாடல்கள் அகப் பொருள் தழுவித் தோழி கூற்றாகவும், செவிலி கூற்றாகவும், தலைவி கூற்றாகவும், தலை வன் கூற்றாகவும் அமையப் பெற்றுள் ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

### கல்வளை அந்தாதியின் தோற்றப் பின்னணி

சின்னத்தம்பிப் புலவரின் தந்தையார் நல்லூர் வில்வராய முதலியார் நிறைந்த தமிழ்ப் புலமையும் கவித்துவ மும் வாய்க்கப் பெற்றவர். கல்வளைப் பிள்ளையார் மீது பெரிதும் ஈடுபாடு கொண்டவர். பிள்ளையார் மீது ஓர் அந்தாதிப் பாடலை தொடங்கி முதல் இரண்டு அடிகளையும்,

"தார்கொண்ட பூமல் லிகைச்சேர்க்கை யிற்றும்பி சாலப்பம்புஞ்
சீர்கொண்ட கல்வளை யந்தாதி பாடத் திரைக்கடல்சூழ்"

என எழுதி கூரையில் செருகி வெளியே சென்றிருக்கிறார் அவர் மீள திரும்பி வந்த போது,

"பார்கொண்ட பல்லுயிர்க் கானந்த மும்மதம் பாயுங்கும்பக்
கார் கொண்ட கம்பக் களியானை முன்னின்று காப்பதுவே"

என சின்னத்தம்பிப் புலவர் பூரணப்படுத்தி இருந்தமையை அறிந்து, தன்னுடைய மகனின் கவித்திறனை வியந்து, முறைப்படி பாடமும் நடத்தி கல்வளை அந்தாதி பாடி முடிக்கும் பொறுப்பினையும் வழங்கினார். (சண்டிலிப்பாய் கல்வளை. ஸ்ரீ பராமானந்தப் பிள்ளையார் கோயில் வரலாறு:2016:15)

கல்வளை அந்தாதியின் வரலாற்றுடன் தொடர்புடையதாக இவ் வில்வராய முதலியாரது நாமம் காணப்படுகின்றது. அதாவது போர்த்துக்கேயர் காலத்தில் அழிக்கப்பட்ட இவ்வாலயத்தினை, ஒல்லாந்தர் காலத்தில் வெற்றி வேலாயுத முதலி என்பவர் மீள நிர்மானித்தார் எனவும், அவருக்குப் பின்னர், இவ்வாலயத்தினை வில்வராய முதலியார் பரிபாலனம் செய்தார் எனவும், கல்வளை விநாயகர் ஆலயத்துடன் தொடர் புடைய வரலாற்றுக்கதை காணப்படு கின்றது. (சண்டிலிப்பாய் ஸ்ரீ பரமானந்தப் பிள்ளையார் கோயில் வரலாறு:2016:49)

சின்னத்தம்பிப் புலவரை முதலியார் இராசநாயகம் "சண்டிலிப்பாய் வில்லவ ராய சின்னத்தம்பி புலவர்" என்று குறிப்பிடு வதும் இங்கு சுட்டத்தக்கதாகும். (இரகுபரன்.க.. (பதிப்புரை).2005:XIII) இக் கூற்றுக்களடிப்படையில் ஆராய்கின்ற போது சண்டிலிப்பாய் (கல்வளை) இவர் களுடைய பூர்வீக இடமாக அமைந்திருக்கக் கூடுமோ? என ஒரு ஐயம் எம் மிடையே நிலவுகின்றது.

### கல்வளையந்தாதியின் தனித்துவம்

கல்வளையந்தாதியானது சின்னத்தம்பிப்புலவரின் வித்துவச் செருக்கைக் காட்டும் தமிழ்ப் பக்தி இலக்கியமாகக் காணப்படுகின்றது., ஈழ நாட்டுப்புலவர்கள்

அந்தாதி பாடுவதில் கைதேர்ந்தவர்கள் என்பதனை உலகுக்கு காட்டுவதாக புலவரவர்களின் அந்தாதி அமையப்பெற்றுள்ளது. தமிழ் நாட்டிலும் இவ்வந்தாதி யானது பாட நூலாகக் கற்பிக்கப்பட்டமை இதன் சிறப்பிற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

"மதுரைத்தமிழ்ச்சங்கத்திற் சிலவாண்டுகட்கு முன்னர் மறைசையந்தாதி, கல்வளையந்தாதி தொடக்க வகுப்பிற்குக் கற்பித்தனர்." (சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தினர், (பதிப்புரை), சென்னை)

தமிழ்நாட்டிலுள்ள அந்தாதி நூல்களைவிட ஈழநாட்டுப்புலவரின் அந்தாதி சிறப்பானதாகக் காணப்படுவது இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

யாழ்ப்பாணத்து நல்லூர் சின்னத்தம்பிப்புலவர் இயற்றிய இக்கல் வளையந்தாதி சொன்னயம், பொருணயம் வாய்ந்துள்ளதென அறிஞர் எவராலும் பாராட்டப்பட்டது. இதன் அருமை நோக்கி யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் தாம் நடாத்தும் பாலபண்டித பரீஷைக்கு இதனை ஒரு பாடமாக விதித்துள்ளது. (திருஞான சம்பந்தன்.மா.வே. 1934:நூன்முகம்)

ஆகவே ஈழம், தமிழ்நாட்டில் கல்வளையந்தாதியானது பாடநூலாக போதிக்கப்பட்டமை அதன் தனித்துவத் திற்கு சிறந்த எடுத்துக்காட்டுக்களாகும்.

## கல்வளையந்தாதிக்கு எழுந்த உரைகள்

சின்னத்தம்பிப்புலவர் ஈழத்து புலமை மரபின் முக்கியமான அடை யாளமாக விளங்குபவர். இத்தகைய சிறப்புமிக்க புலவரது படைப்பாக்க மாகிய கல்வளை யந்தாதிக்கு பிற்பாடு பல உரைகள் எழுதப்பட்டன. அந்தவகையில் சிவசம்புப் புலவரவர்களின் மாணாக்கரும் இயற்றமிழ்ப் போதகருமாகிய வல்வை சு. வைத்திலிங்க பிள்ளை அவர்கள் இவ் வந்தாதிக்கு ஒரு நுட்பமான உரையெழுதிப் பல வருடங்கட்கு முன்னர் அச்சிடு வித்து வெளிப்படுத்தியுள்ளார். இவ்வுரையுடன் வல்வை ச. நமச்சிவாய பிள்ளை வல்வை பாரதீ நிலைய முத்திராசர சாலையில் 1887 ம் ஆண்டில் பதிப்பித்தார். இவ்வுரையினைப் பழையவுரை என்ற பெயரோடு எஸ். அநவரத விநாயகம் பிள்ளை சென்னை ரிப்பன் அச்சியந்திர சாலையில் மீண்டும் 1913 இற் பதிப்பித்தார். சி. தம்பையாப்பிள்ளை (வண்ணை சுவாமிநாத பண்டிதர்) சென்னை ஆறுமுகவிலாசயந்திர சாலையில் 1895 ல் கல்வளையந்தாதியைப் பதிப்பித்துள்ளார். சிவசங்கரன் செட்டி வெளியீடாக 1913 இல் சென்னை ஆறுமுகவிலாசயந்திர சாலையிலிருந்து கல்வளை யந்தாதிப் பதிப்பொன்று சைவப்பிரகாசயந்திரசாலையிலிருந்து வெளிவந்தது. வைத்திலிங்கபிள்ளையவர் கள் எழுதிய உரையைத்தழுவியே பிற்பாடு இவ்வுரைகள் எழுதப்பெற்றதாகும்.

## கல்வளை விநாயகர் தல வரலாறு

யாழ்ப்பாணத்து மக்களது பண்பாட்டு வாழ்வியலில் விநாயக வழி பாடானது இரண்டறக் கலந்துள்ள தன்மையினை அங்கு ஊர்கள் தோறும் எழுந்தருளியுள்ள விநாயகர் ஆலயங்கள் மூலம் அறியலாம். அந்த வகையில் சண்டிலிப்பாயில் கோயில் கொண்டருளும் கல்வளைப் பிள்ளையாரின் தொன்மையும் பெருமையும் ஈழத்து சைவத் தமிழ்ப் பண்பாட்டு வாழ்வியலில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

சண்டிலிப்பாய் கல்வளைப் பிள்ளையார் ஆலயத்தின் தொன்மையானது, அன்னாளில் கந்தரோடையை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த உக்கிரசிங்கனின் பட்டத்தரசி மாருதப் புரவீகவல்லி காலத்துடன் தொடர்பு பட்டதாகக் காணப்படு கின்றது. (கி. பி. 780) சோழ இளவரசி மாருதப்புரவீக வல்லி அமைத்த ஏழு ஆலயங் களில் ஏழாவது ஆலயம் தான் கல்வளை (பரா மானந்த) பிள்ளையார் ஆலயமாகும். இக் கல்வளை பிள்ளையார் ஆலயத்தை பரிபூரணமாகக் கட்டி முடித்து மருதப் புரவீக வல்லி வழிபட்ட போது தான் அவருடைய உடல் நோயும், மனநோயும் முற்றாக நீங்கி பேரழகு பெற்று முக மலர்ச்சியடைந்து பரம ஆனந்தம் அடைந் தார். அதனால் அவர் பரமானந்தம் அடைந்து "பரமானந்தம் பிள்ளையாரே" என்று விழித்து வழிபட்டு வந்தார் என்பது ஐதீகம். (சண்டிலிப்பாய், கல்வளை ஸ்ரீ பரமானந்தப் பிள்ளையார் கோயில் வரலாறு:2016:3)

இவ்வாலயம் 1621 ஆம் ஆண்டு போர்த்துக்கேயத் தளபதி டி. ஒலிவேரா என்பவரால் அழிக்கப்படும் வரை உக்கிர சிங்கனும், அவருடைய பட்டத்துராணி மாருதப் புரவீக வல்லியும் பரிபாலனஞ் செய்து வந்துள்ளார்கள். இதன் பின்பு 1658 ஆண்டு தொடக்கம் 1795 ஆம் ஆண்டு வரை இடம் பெற்ற ஒல்லாந்தர் ஆட்சிக் காலத்தில் சைவ சமய வழிபாடு தளிர் விடத் தொடங்கியது. இக்காலத் தில் வெற்றி வேலாயுத முதலி என்பவர் சண்டிலிப்பாய் கிராமத்திற்கு அதிகாரி யாக இருந்துள்ளார். பின்பு அவரே இக்கோவிலை மீளவும் கட்டுவித்துள்ளார். இவருக்கடுத்து வில்வராய முதலியார் இக்கோயிலை பரிபாலனம் செய்தவராக காணப்படுகின்றார். (சண்டிலிப்பாய், கல் வளை ஸ்ரீ பரமானந்தப் பிள்ளையார் கோயில் வரலாறு:2016:49) இங்கு குறிப்பிடப்படும் வில்வராய முதலியார் தான் நல்லூர் சின்னத்தம்பிப் புலவரின் தகப்பனாரே என்பது ஆராயத்தக்கதாகும். ஏனெனில் சின்னதம்பிப் புலவரின் தந்தையார் வில்வராய முதலியார் கல்வளைப் பிள்ளையார் மீது பக்தி கொண்டு தொடங்கிய அந்தாதிப் பாடலை சின்னத்தம்பிப் புலவர் கல்வளையந்தாதியாக பாடி முடித்துள்ளார் என்பதனை இங்கு நினைவு கூருவது மிகப் பொருத்தமானதாகும்.

இக்கோவிலின் தல விருட்சங் களாக வன்னி, கொன்றை, கடம்பு, அரசு ஆகிய விருட்சங்கள் பூத்துக் குலுங்கி நிற்கின்றன. கல்வளைப் புஸ்கரணி இத்தலத்தின் தீர்த்தமாகும். எனவே மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் முச் சிறப்பினைக் கொண்ட பெருமைமிக்க தொன்மையான தலமாக கல்வளை விநாயகர் தலம் காணப்படுகின்றது.

### கல்வளை அந்தாதியில் கூறப்படும் விநாயக வழிபாட்டின் சிறப்புக்கள்

போர்த்துக்கேயர் காலத்தை யடுத்து தோற்றம் பெற்ற ஒல்லாந்தர் காலப்பகுதி சைவ சமயம் மீண்டும் புத்துயிர் பெற்று, மக்கள் பக்தி உணர்வு மிக்கவர்களாக விளங்கினர். இவ்வுணர்வுக்கு அடித்தளமாக விளங்கும் ஆலய வழிபாடானது மேலோங்கியது. ஏனெனில் சைவ ஆலயங்களெல்லாம் மறுசீரமைக்கப்பட்ட காலப்பகுதி இது வாகும். இவ்வாலய வழிபாட்டினை மேம்படுத்தவும், வரலாற்றுச் சிறப்புமிக்க ஆலயங்களின் பெருமையினை மக்கள் மத்தியில் கொண்டு சேர்ப்பதன் மூலம் பக்தியுணர்வினை பெருக்கவும் இக்காலப்பகுதியில் பல சைவத்தமிழ் இலக்கியங்கள் தோற்றம் பெற்றன. இத்தகைய சூழலில் தோற்றம் பெற்ற கல்வளை

அந்தாதியானது மக்களை ஆலய வழிபாட்டின்பால் நாட்டம் கொள்ள வைப்பதற்கும் பக்தியுணர் வினைத் தூண்டி விடுவதற்குமான சிறந்ததொரு படைப்பாக அமைந்தது. இவ்வந்தாதியில் கல்வளை விநாயகரின் சிறப்புக்கள் பலவாறாகப்பாடப் பட்டுள்ளது. இவ்வந்தாதியினைப் படிப் பவர் நெஞ்சத்திலே பக்தி ஊற்றெடுக்கும் வண்ணம் புராண இதிகாசக் கதைகளுடன் தொடர்புடையதாக விநாயகரது வீர தீரச் செயல்கள், விநாயக வழிபாட்டின் சிறப்புக்கள், கல்வளை விநாயகரைத் துதிப்பதனால் பக்தர் களுக்கு ஏற்படும் இம்மை மறுமைப் பயன்கள் போன்றன சிறப்பாகக் கூறப் பட்டுள்ளன.

புராண இதிகாசக்கதைகளுடன் தொடர்புடையதாக கல்வளை பிள்ளை யாரின் பெருமையினைக்கூறுவதனூடாக அக்கால மக்களினை ஆலய வழிபாட்டின் பால் ஈர்க்கின்றார். அதாவது,

"மைக்கண்டனேறிய தேரச்சறுக்கும் வரதன் வெந்தீ" (க.அ.11)

திரு நீலகண்டராகிய பரமேசுவரன் எழுந்தருளிய தேரின் அச்சினை ஒடியும்படி செய்தருளிய வரத மூர்த்தி எனவும்,

"........... மாங்கனி வாங்கிய கல்வளை மாகர் உம்பனை" (க.அ. 13)

சிவபிரானிடத்தில் மாங்கனி வாங்கிய கல்வளைப் பெருமானே எனவும்,

"கவி நாயகன் றொழும் ராமன் கொலைப்பாவங்காய்ந்திடும்" (க.அ. 14)
"இலங்கை இராவணன் கண்ட துண்டம்பட வெய்சரம்ப" (க.அ. 36)

இலங்கையை ஆண்ட இராவணனை வதைத்த இராம பிரானும் ஐராவதத்தை வாகனமாகக் கொண்ட இந்திரனும் வணங்கும் கல்வளை பிள்ளையார் எனவும் சிறப்பிக்கப் பட்டுள்ளது.

இவ்வாறான சிறப்புப் பெற்ற கல் வளைப் பிள்ளையாரை வணங்குவதனால் பக்தர்கள் இகபர சுகத்தினை அடைவார்கள் எனக்கூறி ஆலய வழிபாட்டின் பால் மக்களுடைய கவனத்தினை திருப்பி, சைவ வளர்ச்சிக்கு வித்திடுகின்றார். அதாவது,

"இந்திரலோகமும் துய்ப்பு அரிதோ" (க.அ. 89)

எனவும், பிரம்மா, இந்திரன் முதலான தேவர்களால் வணங்கப்படும் பரம சிவனுடைய திருக்குமாரராயுள்ள கல் வளைப்பதி விநாயகப் பெருமானுடைய திருவடிகளைத் தியானிப்போர் பிறவித்துன்பத்தை அடையார் எனவும்,

"............. கல்வளைப்பதிவாழ்
கற்பக நன்னிழல் சேர்ந்தார் கருக்கரை கண்டவரே" (க.அ. 01)

திருமால் தேடியறியாத சிவ பிரானின் திருக்குமாரரே, கல்வளைப் பெருமானே என்று துதிப்பவரை தீவினைகள் அணுகாது எனவும்

".....கல்வளை அண்ணல் அடியர்
உளத்து அனந்தரம் வாழ்வான் வினை அஞ்சிடும்" (க.அ. 04)

விநாயகக் கடவுள் கோயில் கொண்டருளிய கல்வளைப்பதியை தரிசிப்போரை, சூரியன் முன்னிலையிற் பனி நீங்குதல் போல தீவினை விரைவில் விட்டகலும் என்பதனை,

"......கல்வளை காணிலாரைக்
கணத்தலை வற்பகை முன்பனி மானுங் கருகிடின்" (க.அ.15)

எனவும் புலவர் குறிப்பிட்டுள்ளார்.

அக்காலத்தில் சைவ ஆலயங்கள் பல புனரமைக்கப்பட்டு வந்த சந்தர்ப்பத்தில், இக்கல்வளை அந்தாதி யினுடாக கோயிற்றிருப்பணி செய்வதற்கு அனைவரையும் ஊக்குவிக்கின்றார் புலவரவர்கள். ஈசுவர புத்திரராகிய கல்வளைப் பெருமான் எழுந்தருளிய திவ்விய தலத்தில் ஒரு தருமக்கிணற்றையேனும் அமைக்காதவரும் அத்திருக் கோயிற்றிருப்பணியை முற்றுவிக்காத வரும் எவ்வாறு ஈடேறப்போகிறார்.

"......கல்வளைக்கண் பரிந்தொரு
கூபம் கயம் தொட்டு ஆலயம் இயற்றார் எப்படி உய்வார்" (க.அ.50)

சைவ மக்கள் சிவசின்னங்களில் ஒன்றாகிய வீபூதி தரித்து சைவ வாழ் வினை மீண்டும் வாழ்வதற்கு தமது அந்தாதியினூடாக அடிகோலுகின்றார் புலவர்.

"இரும்புண்டர வெண் டுகண்மணி மந்திர மெய்தன்பரை
...இரும்புண்டருமயிற் தென்றிசைக் கோன் பினையென் செய்வனே" (க.அ.50)

அதாவது, சைவசாதனத்தைப் பூண்ட மெய்யடியவர்களைத் தம்முடன் சேர்த்தருளும் கருணை வள்ளலாகிய கல்வளைப் பெருமானைச் சதா தியானித் துத் துதித்துக் கொண்டிருப்பின் யம பயமில்லை என்கிறார்.

இத்தகைய சிறப்புப் பெற்ற கல்வளை விநாயகரை வழிபடும் அன்பர் களுக்கு கல்வி, செல்வம் முதலிய பேறுகளும் கிடைக்கப்பெறும் என்கிறார்.

"....... தங்க மலையரும் பாக் கொம்பிரண்டுந்தருவிப்பனே" (க.அ.68)

மேரு மலையிற் பாரதம் எழுதிய பரம் பொருளே, உமாதேவி திருக்கு மாரரே எனக்கூறி கல்வளைப் பெரு மானைத் துதிப்போர் கல்வி, செல்வம் இரண்டினையும் பெறுவர் என இவ் விநாயக வழிபாட்டின் சிறப்புக்கள் பல வாறாக கூறப்பட்டுள்ளது.

பகுப்பாய்வு

ஈழத்தில் தோன்றிய தமிழ்ப் புலவர்களுள் தமிழ் மொழிக்கும் இலக்கி யத்திற்கும் செழுமை சேர்த்தவர் என்ற வகையில் நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் சிறப்புப் பெறுகின்றார். இவரது ஆக்கமாகிய கல்வளையந்தாதியானது அதன் செய்யுள் சிறப்புக்காரணமாக ஈழநாட்டில் மட்டுமல்ல தமிழ் நாட்டி லும் செல்வாக்குப் பெற்று விளங்கி யுள்ளது. வேற்றுக்கலாசாரம், இனம், மொழி போன்ற மாறுபட்ட சூழலில் தோற்றம் பெற்ற இக்கல்வளையந்தாதியானது, யாழ் பிரதேசத்தின் புராதன வரலாற்றுடன் தொடர்புடைய கல்வளை ஆலயத்தின் பெருமையினையும், அங்கு எழுந்தருளியுள்ள விநாயகருடைய சிறப்புக்களையும் எடுத்துக்கூறுவனவாக அமைந்துள்ளது. இக்கல்வளை அந்தாதியானது செய்யுள் நயமும் பக்திச் சுவை யும் சொட்டச் சொட்டப்பாடப்பட்ட பிரபந்தவகையாகும். இவ்வந்தாதியைப் பாடியமை மூலம் அக்காலத்து மக்களை ஆரியச்சக்கரவர்த்திகள் காலத்தினைப் போல மீண்டும் சைவ வாழ்வியலுக்கு கொண்டு வருகின்றார் புலவரவர்கள். இக்கல்வளை அந்தாதியினைப் படிப்ப தன் மூலம் அடியவர் பல்வேறு நன்மைகளைப் பெறுவார்கள் என புலவரவர்கள் கூறியிருப்பதன் மூலம் அக்காலமக்களினை பக்திச் சூழலுக்குள் கொண்டு வருகின்றார். இதன் மூலம் சைவ சமயம் மீண்டும் மறுமலர்ச்சியடைய இவ்வந் தாதி உறுதுணையாக அமைந்ததெனில் மிகையில்லை. இவ்வாறான சிறப்புப் பெறும் இக்கல்வளை அந்தாதியினை ஆய்வு செய்வதும் இன்றைய கால கட்டத்தின் தேவையேயாகும். இவ்வந் தாதியின் சிறப்புக்களை பல்கலைக்கழக மாணவர் முதல்

உயர் கல்வி கற்கும் மாணவர்கள் அனைவரும் அறிந்து கற்க வேண்டும். ஏனெனில் இது நம் ஈழ நாட்டின் சைவத்தமிழின் பெருமையினை நிலைநாட்டத் தோற்றம் பெற்ற தலை சிறந்த படைப்பாக அமையப் பெற்றுள்ளது. இதன் மாட்சிமையினை இன்றைய தலைமுறையினருக்கு மட்டுமன்றி எதிர்காலச்சந்ததியினருக்கும் கொண்டு செல்ல வேண்டியது எம் ஒவ் வொருவருடைய கடமையும் பொறுப்பு மாகும்.

## பயன்படுத்தப்பட்ட துணை நூல்கள்.

அர்னால்ட்.J.R..(1886). பாவலர் சரித்திர தீபிகம். யாழ்ப்பாணம்.

இரகுபரன். க., (பதிப்பு). (2005). நல்லூர் சின்னதம்பிப்புலவர் பிரபந்தங்கள். இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம். கொழும்பு.

க்ரியாவின் தற்காலத் தமிழ் அகராதி.(1992) க்ரியா வெளியீடு. சென்னை.

சதாசிவம்.ஆ.. (தொகுப்பு). (1966). ஈழத்துத் தமிழ்க் கவிதைக் களஞ்சியம். சாகித்திய மண்டல வெளியீடு. கொழும்பு.

சண்டிலிப்பாய். கல்வளை ஸ்ரீ பரானந்தப் பிள்ளையார் கோயில் வரலாறு. (2016). கல்வளை பிள்ளையார் கோயில் தர்மகர்த்தா சபை. சண்டிலிப்பாய்.

சிவசண்முகராசா. சே.. (2013). காலத்தை வென்று நிற்கும் கந்தரோடை. சிவரஞ்சனம் ஒப்செற் அச்சகம். கோண்டாவில்.

சிவலிங்கராஜா.எஸ்.. (2009). ஈழத்துத் தமிழ் இலக்கியச் செல்நெறி. குமரன் புத்தக இல்லம். கொழும்பு - சென்னை.

சின்னத்தம்பிப்புலவர்.(1964). கல்வளையந்தாதி மூலமும் உரையும். திருநெல்வேலித் தென்னிந்திய சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம். திருநெல்வேலி.

திருஞானசம்பந்தப்பிள்ளை.ம.வே..(1934). கல்வளை யாந்தாதி. சைவபரிபாலன சபை. யாழ்ப்பாணம்.

மதுரைச் தமிழ்ப் பேரகராதி. முதலாம் பாகம். (2004) சந்தியா பதிப்பகம். சென்னை.

முத்துத்தம்பிப்பிள்ளை.ஆ.. (1915). யாழ்ப்பாணம் சரித்திரம் (இரண்டாம் பதிப்பு). நாவலர் அச்சகம். யாழ்ப்பாணம்.

வாழ்வியற் களஞ்சியம்-தொகுதி-07. (1991). தமிழ்ப் பல்கலைக்கழகம். தஞ்சாவூர்.

https://thumi.org. வழங்கியாறும் - 20. இதழ் - 20.